பகுதி ஒன்று-65.00

	செயல்திறன் மதிப்பீட்டின்படி குழுவால் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள்	குறைபாடுளை சரிசெய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமைகள்
1	நிலையான சொத்துப் பதிவேடு இன்றுவரை பராமரிக்கப்படவில்லை	சுகாதார அமைச்சிற்குரிய மருத்துவமனைகள் மற்றும் பிற நிறுவ னங்களுக்கு நிலையான சொத்து பதிவேடுகளை புதுப்பித்த நிலை யில் பராமரிக்க தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன மற்றும் ஏற்கவே நிலையான சொத்து பதி வேடுகள் புதுப்பிக்கப் பட்டு அதற்கேற்ப பராமரிக்கப்படுகின்றன.
2	சேதங்கள் குறித்த பதிவேடு இன்றுவரை பராமரிக்கப்படவில்லை	சுகாதார அமைச்சிற்குரிய மருத்துவமனைகள் மற்றும் பிற நிறுவன ங்களுக்கு சேதங்கள் குறித்த பதிவேடுகளை புதுப்பித்த நிலையில் பராமரிக்க தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. மற்றும் ஏற்கவே சேதங்கள் குறித்த பதிவேடுகள் புதுப்பிக்கப்பட்டு அதற்கேற்ப பராமரிக்கப்படுகின்றன
3	கணக்காய்வாளர் நாயகம் எழுப்பிய கணக் காய்வு வினாக்களுக்கு ஒரு மாதமாகியும் பதில் அளிக்கப்படவில்லை.	சுகாதாரச் செயலாளருக்கு அனுப்பப்படும் கணக்காய்வு வினாக்கள் சுகாதார அமைச்சின் பல்வேறு பிரிவுகளுக்கும், சம்பந்தப்பட்ட மருத்துவமனைகள் மற்றும் நிறுவனங்களுக்கும் தெளிவுபடுத்தல் களைப் பெறுவதற்கு அனுப்பப்பட வேண்டும் மற்றும் அத்தகைய பதில்களைப் பெறுவதில் தாமதங்கள் ஏற்படுகின்றன. மேலும் முடிந்தவரை உரிய காலத்திற்குள் பதில்களை வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.
4	உள்ளக கணக்காய்வு வினாக்களுக்கு ஒரு மாதத்திற்குள் பதில் இல்லை.	உள்ளக கணக்காய்வுக்கு பின் வழங்கப்பட்ட உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு கிடைத்ததன் பேரில், குறித்த கணக்காய்வு அறிக்கைகளுக்கான பதில்களை ஒரு மாத காலத்திற்குள் சமர்ப்பிக்குமாறு சுகாதார அமைச்சின் அனைத்து மருத்துவமனைகள் மற்றும் நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. கணக்காய்வு அறிக்கைகள் வழங்கப்படும் போது, சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு ஒரு மாதத்திற்குள் பதில்களை அனுப்புமாறு எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கப்படும். மேலும் ஒரு மாதத்திற்குள் அவர்கள் தங்கள் பதில்களை சமர்ப்பிக்கத் தவறினால், சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தலைவர்களுக்கு நினைவூட்டல் கடிதங்கள் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும். அதன்படி, தற்போது கணக்காய்வு அறிக்கைகள் அனுப்பப்பட்ட நிறுவனங்களிற்குள், கணிசமான எண்ணிக்கை யிலான நிறுவனங்கள் கணக்காய்வு வினாக்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் பதில்களை வழங்கியுள்ளன.
5	2020.08.28 ஆம் திகதிய 01/2020 எனும் இலக்கமடைய பொது நிதிச்	சுற்றறிக்கைகள் மூலம், சுகாதார அமைச்சிற்குரிய மருத்துவ மனைகள் மற்றும் பிற நிறுவனங்களுக்கு களஞ்சிய

	சுற்றறிக்கை யின் பகுதி 1 இன் பந்தி 11.1 இல் குறிப் பிடப்பட்டுள்ள காலக்கெடுவுக்குள் நி.ஒ.756 (6) இன் படி களஞ்சிய கணக் கெடுப்பு மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன் உரிய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்திடம் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்படவில்லை.	கணக்கெடுப்பு களை மேற்கொள்வது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளதுடன், 64 மருத்துவமனைகள் மற்றும் நிறுவனங்களுக்கான கணக்கெடுப்பு சபைகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் தற்போது அதற்கான கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. களஞ்சிய சரிபார்ப்பு பிரிவினால் சுமார் 12 நிறுவனங்களில் கணக்கெடுப்பு நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன் தற்போது மொனராகலை, நாவலப்பிட்டி, எம்பிலிப்பிட்டிய, மாத்தளை, நுவரெலியா, ராகம புனர்வாழ்வு மற்றும் ஆணியகந்த ஆகிய வைத்தியசாலைகளிலும், எய்ட்ஸ் கட்டுப்பாட்டுப் பிரிவு மற்றும் தடயவியல் மருத்துவம் மற்றும் நச்சுயியல் நிறுவனங்களி லும் மற்றும் கந்தானை தாதியர் பாடசாலையிலும் ஆய்வுகள் மேற்கொள் ளப்பட்டுகின்றன. தற்போது கணக்காய்வு சபைகள் நியமிக்கப்பட்டு, சுகாதார அமைச்சிற்குரிய அனைத்து மருத்துவ மனைகள் மற்றும் நிறுவனங்களில் களஞ்சிய கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டுவருகிறது. இணைப்பு 01 இல் குறிப்பிடப் பட்டுள்ளபடி, நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் களஞ்சிய கணக் காய்வு களை பூர்த்தி செய்வதற்கும், அதற்கான அறிக்கைகளை கணக்காய் வாளர் நாயகத்திற்கு அனுப்பவும் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
6	களஞ்சியங்களின் வருடாந்திர கணக்கெடுப் பில் வெளிப்படுத்தப்பட்ட உபரிகள் (surpluses) மற்றும் குறைபாடுகள் குறித்த பரிந்துரைகளும் மற்றும் பிற பரிந்துரை களும் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் செயல்படுத்தப்படவில்லை.	களஞ்சியங்களின் வருடாந்திர கணக்கெடுப்பில் வெளிப்படுத்தப் பட்ட உபரிகள், குறைபாடுகள் குறித்த பரிந்துரைகளையும் மற்றும் பிற பரிந்துரைகளையும் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் நடை முறைப்படுத்த தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் ஒவ்வொரு மருத்துவமனைகள் மற்றும் நிறுவனங்களுக்கும் உரிய அவதானிப்புத் தாள்களை முடித்து வைப்பதற்குத் தேவை யான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும் எதிர்காலத்தில் அனைத்து அவதானிப்புத் தாள்களையும் விரைவாக முடித்து வைப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
7	அனைத்து வாகனங்களின் உரிமையையும் உறுதிப்படுத்தும் ஆவணங்கள் இல்லை.	சரிபார்க்கப்பட வேண்டிய 2299 வாகனங்களில் 1039 வாகனங்கள் சுகாதார அமைச்சிற்கு சொந்தமானவை அல்ல என கண்டறியப் பட்டுள்ளதுடன், மீதமுள்ள 1260 வாகனங்களில் 610 வாகனங்கள் பற்றிய தகவல்கள் தெரியவந்துள்ளன. மேலும் 650 வாகனங்களின் அடையாளம் மேலும் சரிபார்க்கப்பட வேண்டியுள்ளதுடன் அது தொடர்பான பணிகளும் நடைபெற்று வருகின்றன.

8	முன்பதிவு வாகனங்கள் (Pool vehicles) தொடர் பாக நாளாந்த இயக்க விளக்க குறிப்புகள் மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்படவில்லை.	சுகாதார சாரதிகளால் இயக்கப்படும் வாகனங்களைப் பொறுத்த மட்டில், 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்ட நாளாந்த இயக்க விளக்க அட்டவணைகள் (daily running charts) ஒவ்வொரு வாகனத்திற்கும் தனித்தனியாக கோவைப்படுத்தப்பட்டு ள்ளதுடன் 2024.01.20 ஆம் திகதி அன்று கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது.
9	அனைத்து வாகனங்களிலும் அரச சின்னம் வர்ணம் பூசப்படவில்லை.	அமைச்சுக்குச் சொந்தமான அனைத்து வாகனங்களிலும் தேசிய சின்னத்தை வரைவதற்கு 2024.02.07 அன்று விலைகோரல் கோரப்பட்டது
10	வாகனத்தை உபயோகமற்றதென ஒதுக்கப் பட்ட பின்னரும் 08 மாதங்களுக்கு மேலாகி யும் வாகனங்கள் அப்புறப்படுத்தப்பட வில்லை.	கடந்த காலப் பகுதியில் வாகனங்களை உபயோகமற்றதென ஒதுக் குவது தாமதமாகி வருவதாக தெரிவிக்கப்படுவதுடன் 2024.01.29 ஆம் திகதி அன்று 40 பதிவு செய்யப்பட்ட வாகனங்களாகவும் மற்றும் 30 வாகனங்கள் பழைய வாகனங்களாகவும் 80 வாகனங் கள் ஏலம் விடப்பட்டது
11	F.R.103, F.R.104, F.R.109 மற்றும் F.R.110 இன்படி அரசு வாகன விபத்துக்கள் தொடர் பாக முறையாக நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படவில்லை.	சுகாதார அமைச்சுக்கு சொந்தமான வாகனம் ஒன்று விபத்துக்குள் ளாகும்போது, நிதி ஒழுங்குவிதிமுறைகளின்படி அந்த விடயத்தை எவ்வாறு கையாள வேண்டும் மற்றும் செயல்பட வேண்டும் என்பது தொடர்பாக சுகாதார அமைச்சின் கீழ் வரும் மருத்துவ மனைகளின் தலைவர்கள் மற்றும் அனைத்து சுகாதார நிறுவனங்க ளின் தலைவர்களுக்கும் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது (இணைப்பு 02).மேலும் நிதி ஒழுங்குவிதிமுறைகளின்படி கையாளப் படாத விபத்துக்கள் குறித்து சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிரு ந்து தகவல் பெறப்பட்டு, விபத்துகள் தொடர்பாக தொடர வேண்டிய பணிகள் நடந்து வருகின்றன.
12	2016.12.29 ஆம் திகதிய 30/2016 எனும் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பந்தி 3.1 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கு இணங்க நிறுவனத்திற்கு சொந்தமான வாகனங்களின் எரிபொருள் எரிவது தொடர்பாக சோதிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	பொது நிர்வாக சுற்றறிக்கை 30/2016 இன் விதிமுறைகளின்படி, சுகாதார அமைச்சின் கீழ் வரும் அனைத்து மருத்துவமனைகள் மற்றும் நிறுவனங்களின் வாகனங்களின் எரிபொருளை பரிசோதிப் பதற்கான பொருத்தமான மாதிரிப் படிவம் அறிமுகப்படுத்தப்பட்ட துடன் அதன்படி எரிபொருள் சோதனை புதுப்பிக்கப்பட்டு வருகிறது.
13	F.R 94(1) இன் பிரகாரம் ஒரு செலவு விடய த்திற்கு வழங்கப்பட்டுள்ள ஒதுக்கீட்டினைப் பயன்படுத்திய பிறகு,	பொது திறைசேரியின் அறிவுறுத்தலின் பேரில், வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட வரம்புகளை மீறும்

	மீதமுள்ள ஒதுக்கீட்டி ற்கு அங்கீகரிக்கப்பட்ட வரம்புகளை மீறி கடப்பாடுகள்(பொறுப்புகள்) செய்யப்பட்டு ள்ளன.	பொறுப்புகளை ஏற்க வேண்டாம் என்று மருத்துவமனைகள் மற்றும் சுகாதார நிறுவனங் களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
14	ஒரு வருட காலத்திற்கும் மேலாக மீதமுள்ள கடன் நிலுவைகள்	2021.12.31 இல் உள்ளவாறு அறவிடப்படாத கடன் மீதியான ரூ.129.23 மில்லியன் நிலுவையில் இருந்து 2023.12.31 ஆம் திகதி அன்று ரூ.32.37 மில்லியன் அறவிடப்பட்டுள்ளது. ஒரு வருட த்திற் கும் மேலாக நிலுவையில் உள்ள கடன் நிலுவைகளை அறவிடுவத ற்கு நிறுவனங்களுக்குத் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப் பட்டுள்ளன. மேலும் இந்த வருடத்தில் கடன் நிலுவைகளை முடிந்த வரை வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
15	பொது வைப்பு கணக்கில் காலாவதியான வைப்புகளைப் பொறுத்தவரை நி.ஒ.571 க்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வில்லை	வைப்பாளர்கள் இதுவரை எந்த கோரிக்கையும் செய்யாததாலும், சட்ட நடவடிக்கைகள் முடிக்கப்படாமல் இருப்பதாலும், சம்பந்தப் பட்ட வைப்புத் தொகைகள் பொது வைப்பு கணக்கில் வைக்கப்பட இருந்ததாலும் 02 ஆண்டுகளுக்கும் மேலான பொது வைப்பு நிலுவைகள் நி.ஒ.571 க்கு இணங்க செலுத்தப்படவில்லை. இந்த வைப்புத்தொகைகளில் பெரும்பாலானவை கட்டிடத் துறையுடன் தொடர்புடையவை ஆகும். மேலும் அவை கட்டிட நிர்மாணங்கள் தொடர்பாக வைப்பு செய்யப்பட்ட வைப்புத்தொகைகளாகும். அவற்றில் பெரும்பாலானவை ஒப்பந்த நிறுவனங்களினால் இது வரை உரிமைகோரல்கள் சமர்ப்பிக்கப்படாதவையாகும். எவ்வாறா யினும், 02 வருடங்களுக்கும் மேலான பொது வைப்பு நிலுவை களைத் தீர்ப்பதற்கு நி.ஒ.571 க்கு இணங்க நடவடிக்கை எடுக்கு மாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டது.
16	நி.ஒ. 371 க்கு இணங்க வழங்கப்பட்ட தற் காலிக துணை கட்டுநிதிகள் (ad hoc sub imprest) வேலை முடிந்த நாளிலிருந்து ஒரு மாதமாகியும் தீர்க்கப்படவில்லை.	நி.ஒ. 371(5) மற்றும் பொது நிதிச் சுற்றறிக்கை 01/2020 ஆகியவற் றின் பிரகாரம், முன்பணம் பெறப்பட்டு உரிய வேலை முடிவடை ந்து 10 நாட்களுக்குள் குறித்த முன்பணம் செலுத்தப்பட வேண்டும் என்றும், முன்பணம் பெறப்பட்ட பணி ரத்து செய்யப்பட்டால், அதற்கான முன்பணத்தை செட்டில் செய்து மீண்டும் உரிய பணிக்கு விண்ணப்பிக்க வேண்டும் என்றும் ஒவ்வொரு கிளைக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், நிதிக் கட்டுப்பாடு

		தொடர்பான அதிகாரங்களை வழங்குவதில், தற்காலிக துணை கட்டுநிதிகளைப் (ad hoc sub imprests) பெற்று, அது போன்ற ஏதேனும் இரண்டு தற்காலிக துணை கட்டுநிதிகளை தீர்த்து வைக்காத அதிகாரிகளு க்கு மீண்டும் தற்காலிக துணை கட்டுநிதிகளை வழங்க வேண்டாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.
17	திரட்டப்பட்ட வருவாய் நேரடியாக வரு வாயில் வரவு வைக்கப்படவில்லை அல்லது அது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டு ஒரு மாதமாகியும் வருவாய்க் கணக்கில் வரவு வைக்கப்படவில்லை.	ஒவ்வொரு நிறுவனமும் தாம் சேகரிக்கும் வருவாயை நேரடியாக வருவாய் கணக்கில் வரவு வைக்குமாறும் , அவ்வாறு செய்யப் படாத சந்தர்ப்பத்தில் அவற்றை பொது வைப்புக் கணக்கில் வைப்பிலிட்டு ஒரு மாத காலத்திற்குள் வருவாய்க் கணக்கில் வரவு வைக்க வேண்டும் என்றும் அனைத்து மருத்துவமனைகளுக்கும் சுகாதார நிறுவனங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது
18	அங்கீகரிக்கப்பட்ட வரம்புகளை மீறி பணி யாளர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளர்.	மருத்துவ சேவை மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவை யில் உள்ள ஊழியர்கள் அங்கீகரிக்கப்பட்ட வரம்பை விட அதிக மாக உள்ளனர் மற்றும் மருத்துவ சேவையின் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களை அதிகரிப்பதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பகுதி இரண்டு-62.00

	செயல்திறன் மதிப்பீட்டின்படி குழுவால் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள்	**குறைபாடுளை சரிசெய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமைகள்**
1	பிரஜைகள் /சேவைகள் பெறுநர் சாசனத்தை (Citizens/Services Charter) முறையாக தயா ரித்து நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக் கப்பட வில்லை.	அமைச்சு தொடர்பான பிரஜைகள்/சேவைகள் பெறுநர் சாசனம் தயாரிக்கப்பட்டு அதன் சிங்கள பிரதி அமைச்சின் உத்தியோக பூர்வ இணையத் தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இந்த ஆவணம் இலத்திரனியல் வெளியீடு ஒன்றாகவும் (electronic publication) அவ்வப்போது புதுப்பிக்கப்படக்கூடியவாறும் இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அதே வேளை இதன் ஆங்கில மொழி பெயர்ப்பின் மென் பிரதியை (soft copy) இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யவும் மற்றும் இந்தப் பிரஜைகள்/சேவைகள் பெறுநர் சாசனத்தை அமைச்சு வளாகத்தில் முன் உள்ள அறிவிப்புப் பலகையில் காட்ட முடியாது

		என்பதால், அதனை காட்சித் திரையில் (display screen) காட்சிப்படுத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.
2	நிறுவனத்தில் பிரஜைகள் / சேவைகள் பெறுநர் சாசனம் நடைமுறைப்படுத்தப்படுவதை கண் காணித்து மதிப்பீடு செய்வதற்கான முறைமை ஒன்றை நிறுவனம் தயாரிக்கவில்லை.	சுகாதார அமைச்சின் பிரஜைகள் / சேவைகள் பெறுநர் சாசனத் தை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்கள் இருந்தால், 1907 என்ற துரித தொலைபேசியினுடாகவோ (Hot line) அல்லது Whatsapp இலக்கம் 0707907907 மூலமாகவோ அல்லது suwasawana@health.gov.lk என்ற மின்னஞ்சல் மூலமாகவோ நீங்கள் அமைச்சின் குறைகளை ஒருங்கிணைக்கும் பிரிவுக்கு முறைப்பாடு செய்யலாம். இந்த சாசனம் தொடர்பான பரிந்துரைகள் / முறைப்பாடுகள் ஏதேனும் இருந்தால், தொலைபேசி இலக்கம் 0112670182, தொலைநகல் இலக்கம் 0112693866 அல்லது sasinformation@health.gov.lk என்ற மின்னஞ்சல் ஊடாகவும் சிரேஷ்ட உதவிச் செயலாளரிடம் (தகவல் மற்றும் ஊக்கு விப்பு) தெரிவிக்கலாம். மேலும், அனைத்து மருத்துவமனைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களின் தலைவர் களுக்கும் பிரஜைகள் / சேவைகள் பெறுநர் சாசனத்தை தயாரி த்து நடைமுறைப்படுத்தவும், அதனை கண்காணித்து மதிப்பீடு செய்யவும் சரியான திட்டம் ஒன்றை தயாரிக்குமாறு அறிவிக்கப் பட்டுள்ளது.
3	2018 ஜனவரி 24 ஆம் திகதிய 02/2018 எனும் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற் பாடுகளின் பிரகாரம் முறையாக தயாரிக்கப் பட்ட மனித வளத் திட்டம் ஒன்று காணப்பட வில்லை.	2020-2023க்கான மனித வளத் திட்டத்தின் வரைவு முடிவடைந் துள்ளதுடன் அதற்கான பணிகள் விரைவில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், இந்தத் திட்டத்தின் அடிப்படை யில் மனித வளத் திட்டம் ஒன்றையும் தயாரிக்கவும் எதிர்பார்க் கப்படுகின்றது. சுகாதார சேவையானது பன்முகப்படுத்தப்பட்ட சேவை ஒன்றாக இருப்பதால், மனித வளத் திட்டங்களை மத்திய அரசும், மாகாண சபைகளும் தனித் தனியாக தயாரிக்க வேண்டும்.
4	தயாரிக்கப்பட்ட மனித வளத் திட்டமானது, பணிக்குழுவினரில் 50%க்கும் அதிகமான ஊழி யர்களுக்கு குறைந்த பட்சம் ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்குக் குறையாத பயிற்சி வாய்ப்புகளை உறுதி செய்யத் தவறிவிட்டது	வருடாந்தம் பயிற்சித் திட்டங்களுக்காகப் பெறப்படும் வரையறு க்கப்பட்ட ஒதுக்கீடு, அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்கள் மற்றும் நாடு முழுவதும் உள்ள அனைத்து மருத்துவமனைகளிலும் பணியாற்றும் சுமார் 80,000 சுகாதார ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்க போதுமானதாக இல்லை.

		பொது நிர்வாக சுற்றறிக்கையின்படி அந்த அதிகாரிகளுக்கு வருடத்திற்கு குறைந்தபட்சம் 12 மணிநேரப் பயிற்சியை வழங்குவதற்காக, பயிற்சித் திட்டங்களுக்கு வருடத்திற்கு 330 மில்லியனுக்கும் அதிகமான ஒதுக்கீடு தேவைப்பட்டாலும், பயிற்சித் திட்டங்களுக்கான வருடாந்த ஒதுக்கீடு சுமார் 50 மில்லியன் ஆகும். 2023 ஆம் ஆண்டில் பயிற்சித் திட்டங்களுக்காக 50 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், அதனைப் பயன்படுத்தி 15 அடிப்படைப் பயிற்சி பாடநெறிகள் தொடர்பான பரீட்சைகள் மற்றும் ஆராய்ச்சி தொடர்பான பணிகள் உட்பட நாடளாவிய ரீதியில் 800 இற்கும் அதிகமான பயிற்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன் 5000க்கும் மேற்பட்ட பயிற்சி வாய்ப்புகளும் வழங்கப்பட்டுள்ளன.
5	திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளிலிருந்து, வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புகள் 50% க்கும் குறைவாகவே உள்ளன..	வருடாந்த செயல்திட்டத்தின் மூலம் போதிய ஒதுக்கீடுகள் கோரப்பட்ட போதிலும், 2024 ஆம் ஆண்டிற்கு 50 மில்லியன் ரூபா ஒதுக்கீடு மாத்திரமே பெறப்பட்டுள்ளது. பயிற்சித் திட்டத்திற்கு போதுமான ஒதுக்கீடு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டால் பயிற்சி வாய்ப்புகளை நிறைவு செய்யலாம்
6	நிறுவனத்தின் கணக்குகள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம் கேள்விக்குரியதாகவோ அல்லது பாதகமானதாகவோ உள்ளது.	பாதகமான கணக்காய்வு கருத்துக்கு வழிவகுத்த விடயங்களை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
7	கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் உள்ள பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட வில்லை.	கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளையும் மற்றும் அரச கணக்காளர்கள் கமிட்டியின் துணைக் கமிட்டிகள் வழங்கிய கட்டளைகளையும் குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
8	அலுவலர்கள் எவரும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றிய அறிக்கையினை சமர்ப்பிக்கவில்லை.	1988 ஆம் ஆண்டின் 74 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட தன்படி, தேசிய அரச பேரவையின் (National State Assembly) 1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சொத்துகள் மற்றும் பொறுப்புகள் பிரகடனப்படுத்தல் சட்டத்தின் கீழ் அமைச்சின் தலைமை அலுவலகத்தில் பணிபுரியும் நிறைவேற்றுத் தர அலுவலர்கள்

		(Executive Officers) ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 30 ஆம் திகதிக் குள் மத்திய நிர்வாகக் கிளையில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றிய பிரகடனங்களை சமர்ப்பித்து வருகின் றனர். இது குறித்து அனைத்து பதவி நிலை தர அலுவலர்களுக் கும் (staff Grade officers) வருடாந்தம் அறிவிக்கப்படுவதுடன், 2024 ஆம் ஆண்டு இது தொடர்பில் பிரிவுகளின் தலைவர் களுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
9	நி.ஒ.156(1) இன்படி அரசுக்கு இழப்பு ஏற்படுத் தியதற்காக அதிகாரிகளிடமிருந்து கட்டணம் அறவிடப்படவில்லை.	2021 ஆம் ஆண்டில், விசாரணைகளை மேற்கொண்ட பின்னர், அரசாங்கத்தின் பொருட்டு 2,393,089/= ரூபாய் அறவிடப்பட்டு ள்ளது.
10	நி.ஒ.119 இன்படி வசூலிக்கப்பட வேண்டிய மிகைக் கட்டணங்கள் (Surcharges) வசூலிக்கப் படவில்லை.	வசூலிக்கப்படாத மிகைக் கட்டணங்கள் (Surcharges) குறித்து அறிவிக்கப்படவில்லை.
11	அதிகபட்ச சேவைக் காலத்தை பூர்த்தி செய்த அலுவலர்களை உரிய முறையில் இடமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	ஒருங்கிணைந்த சேவையைச் சேர்ந்த அலுவலர்கள், பொது நிர்வாக அமைச்சினால் வருடாந்த இடமாற்றத்தின் கீழ் இட மாற்றம் செய்யப்படுகின்றனர். மேலும் மருத்துவ சேவையில் உள்ள அதிகாரிகள் மற்றும் சுகாதார அமைச்சின் பிற பதவி களில் உள்ள அதிகாரிகள் அந்தந்த பதவிக்குரிய நிர்வாகக் கிளைகளால் இடமாற்றம் செய்யப்படுகின்றனர். சுகாதார அமைச்சின் தலைமை அலுவலகத்தின் உள்ளக இடமாற்றங்கள் தற்போது மத்திய நிர்வாகக் கிளையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

டாக்டர் ரமேஷ் பத்திரன
சுகாதார அமைச்சர்